
ஔவையார் அருளிச் செய்த

# ஆத்திசூடி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் திருத்தப்பட்ட உரையுடன்







இந்துப் பண்பாட்டு நிதியம்
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
இந்துசமய அலுவல்கள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

கணபதி துணை

# ஔவையார் அருளிச் செய்த

# ஆத்திசூடி

## மூலமும் உரையும்



காப்பு

ஆத்தி சூடி யமர்ந்த தேவனை

ஏத்தி யேத்தித் தொழுவோ மியாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவுரை: ஆத்தி - திருவாத்திப் பூமாலையை, சூடி - தரிப்பவராகிய சிவபெருமான், அமர்ந்த - விரும்பிய, தேவனை - பிள்ளையாகிய விநாயகக் கடவுளை, ஏத்தி ஏத்தி - துதித்துத் துதித்து, தொழுவோம் - வணங்குவோம், யாம் - நாங்கள் என்றவாறு.

தேவன் - பிள்ளை, ஏ - ஈற்றசை.

பொருள்: திருவாத்திப் பூமாலையைத் தரிப்பவராகிய சிவ பெருமான் விரும்பிய பிள்ளையாகிய விநாயகக் கடவுளைத் துதித்துத் துதித்து நாம் வணங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூத்திரம்

## 1. அறஞ்செய விரும்பு

பதவுரை : அறம் - தருமத்தை, செய - செய்வதற்கு, விரும்பு - நீ ஆசை கொள்ளு.

பொருள் : தருமத்தைச் செய்வதற்கு நீ ஆசை கொள்ளு.

## 2. ஆறுவது சினம்

பதவுரை : ஆறுவது - (உன்னுள்ளே) தணிய வேண்டுவது, சினம் - கோபமே ஆம்.

பொருள் : உன்னுள்ளே தணியவேண்டுவது கோபமே ஆகும்.

## 3. இயல்வது கரவேல்

பதவுரை : இயல்வது - (கொடுப்பதற்கு) இசைவதை, கரவேல் - (நீ வறுமையினாலே இரப்பவர் களுக்கு) ஒளியாதே.

பொருள் : கொடுப்பதற்கு இசைவதை நீ வறுமையினாலே இரப்பவர்களுக்கு ஒளியாதே.

## 4. ஈவது விலக்கேல்

பதவுரை : ஈவது - (தருமத்தைக் குறித்து ஒருவருக்கு ஒருவர்) கொடுப்பதை, விலக்கேல் - நீ தடுக்காதே.

பொருள் : தருமத்தைக் குறித்து ஒருவருக்கு ஒருவர் கொடுப்பதை நீ தடுக்காதே.

## 5. உடையது விளம்பேல்

பதவுரை : உடையது - (உனக்கு) உள்ள பொருளை, விளம்பேல் - (நீ பிறர் அறியும்படி) சொல்லாதே.

பொருள் : உனக்கு உள்ள பொருளை நீ பிறர் அறியும்படி சொல்லாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஊக்கமது கைவிடேல்

பதவுரை : ஊக்கமது - (செய்தொழிலில்) மனஞ் சோராமையை, கைவிடேல் - நீ கைவிடாதே.

பொருள் : செய்தொழிலில் மனஞ்சோராமையை நீ கை விடாதே.

## 7. எண்ணெழுத் திகழேல்

பதவுரை : எண் - கணித நூலையும், எழுத்து - இலக்கண நூலையும், இகழேல் - நீ இகழ்ந்து தள்ளாதே. (புகழ்ந்து கல் என்பது கருத்து)
கணிதம் - கணக்கு.

பொருள் : கணித நூலையும் இலக்கண நூலையும் நீ இகழ்ந்து தள்ளாதே.

## 8. ஏற்ப திகழ்ச்சி

பதவுரை : ஏற்பது - (ஒருவரிடத்திலே போய்) இரப்பது, இகழ்ச்சி - பழிப்பாகும்.

பொருள் : ஒருவரிடத்திலே போய் இரப்பது பழிப்பாகும்.

## 9. ஐயமிட் டுண்

பதவுரை : ஐயம்-பிச்சையை, இட்டு- (இரப்பவர்களுக்குக்) கொடுத்து, உண் - நீயும் உண்ணு.

பொருள் : பிச்சையை இரப்பவர்களுக்குக் கொடுத்து நீயும் உண்ணு.

## 10. ஒப்புர வொழுகு

பதவுரை : ஒப்புரவு - உலக நடையை அறிந்து, ஒழுகு - (நீ அந்த வழியிலே) நட.

பொருள் : உலக நடையை அறிந்து நீ அந்த வழியிலே நட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. ஓதுவ தொழியேல்

பதவுரை : ஓதுவது - (அறிவு நூல்களை) வாசிப்பதை, ஒழியேல் - (நீ மரண பரியந்தம்) விடாதே.

பொருள் : அறிவு நூல்களை வாசிப்பதைக் கடைசி வரை விடாதே.

## 12. ஔவியம் பேசேல்

பதவுரை : ஔவியம் - பொறாமை வார்த்தைகளை, பேசேல் - நீ பேசாதே.

பொருள் : பொறாமை வார்த்தைகளை நீ பேசாதே.

## 13. அஃகஞ் சுருக்கேல்

பதவுரை : அஃகம் - தானிய விலையை (தானிய அளவை) சுருக்கேல் - (நீ அதிக லாபத்துக்காகக்) குறையாதே.

பொருள் : தானிய அளவை நீ அதிக லாபத்துக்காகக் குறையாதே.

## 14. கண்டொன்று சொல்லேல்

பதவுரை : கண்டு - (ஒன்றைக்) கண்டு, ஒன்று - வேறொன்றை, சொல்லேல் - (நீ சாக்ஷியாகும் போது) சொல்லாதே, (கண்டபடியே சொல்லென்பது கருத்து)

பொருள் : ஒன்றைக் கண்டு வேறொன்றை நீ சாட்சியாகும் போது சொல்லாதே.

## 15. ஙப்போல் வளை

பதவுரை : ஙப்போல் - ஙகரம் (தான் பிரயோசனமுள்ளதாய் இருந்து தன் வருக்கத்தைத் தழுவுதல்) போல, வளை - (நீ பிரயோசனமுள்ளவனாய் இருந்து உன் இனத்தைத்) தழுவு.

ஙகரமானது, அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம் என்று சொல்லுக்குக் காரணமாய் வரும். அதன் வருக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகிய ஙா, ஙி, ஙீ, ஙு ஙூ, ஙெ, ஙே, ஙை, ஙொ, ஙோ ஙௌ என்கின்ற பதினொன்றும் சொல்லுக்குக் காரண மாதல் இல்லை ஆயினும், ஙகரத்தின் பொருட்டு இவைக ளையும் நெடுங்கணக்கிலே வழங்குவார்கள். அது போலவே, நீ கல்வி, செல்வங்களினாலே, பிறருக்கு உதவி செய்வாயாயின், அவர் உன்னைத் தழுவுவதன்றி உன் பொருட்டு உன் இனத்தாரையுந் தழுவுவர் என்பதாம்.

பொருள் : ஙகரம் தான் பிரயோசனமுள்ளதாய் இருந்து தன் வருக்கத்தைத் தழுவுதல் போல நீ பிரயோசனமுள்ள வனாய் இருந்து உன் இனத்தைத் தழுவு.

## 16. சனி நீராடு

பதவுரை : சனி - சனிக்கிழமை தோறும், நீர் ஆடு - (எண்ணெய் இட்டுக் கொண்டு) நீரிலே தலை முழுகு.

புதன் கிழமையிலும் முழுகலாம்.

பொருள் : சனிக்கிழமை தோறும் எண்ணெய் இட்டுக் கொண்டு நீரிலே தலை முழுகு.

## 17. ஞயம்பட உரை

பதவுரை : ஞயம்பட - (பேசுஞ் சொல்லிலே) இன்பம் விளையும் படி, உரை - நீ பேசு.

நயம் என்பது ஞயம் எனப் போலியாயிற்று.

பொருள் : பேசுஞ் சொல்லிலே இன்பம் விளையும்படி நீ பேசு.

## 18. இடம்பட வீடெடேல்

பதவுரை : இடம் - இடமானது, பட - (அளவுக்கு மேற்பட்டு வெறுமை யாய்க்) கிடக்கும்படி, வீடு - வீட்டை, எடேல் - (நீ பெரிதாகக்) கட்டாதே.

பொருள் : இடமானது அளவுக்கு மேற்பட்டு வெறுமையாகக் கிடக்கும்படி நீ பெரிதாக வீட்டைக் கட்டாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. இணக்கமறிந் திணங்கு

பதவுரை : இணக்கம் - (சிநேகத்துக்கு ஏதுவாகிய) நற்குண செய்கைகளை, அறிந்து - தெளிந்து, இணங்கு - (பின் ஒருவனோடு) சிநேகஞ் செய்.

பொருள் : சிநேகத்துக்கு ஏதுவாகிய நற்குணச் செய்கைகளைத் தெளிந்து பின் ஒருவனோடு சிநேகஞ் செய்.

## 20. தந்தைதாய்ப் பேண்

பதவுரை : தந்தை - (நீ உன்) பிதாவையும், தாய் - மாதாவையும், பேண் - (எப்போதும் பூசித்துக்) காப்பாற்று.

பொருள் : நீ உன் பிதாவையும் மாதாவையும் எப்போதும் பூசித்துக் காப்பாற்று.

## 21. நன்றி மறவேல்

பதவுரை : நன்றி - (ஒருவர் உனக்குச் செய்த) உபகாரத்தை, மறவேல் - (நீ ஒரு போதும்) மறவாதே.

பொருள் : ஒருவர் உனக்குச் செய்த உபகாரத்தை நீ ஒரு போதும் மறவாதே.

## 22. பருவத்தே பயிர்செய்

பதவுரை : பயிர் - பயிர்களை, பருவத்தே - (அது அது விளையும்) பக்குவ காலத்திலே, செய் - (வேண்டும் முயற்சியிலே வழுவாமல்) இடு.

பயிருக்கு வேண்டும் முயற்சிகளாவன: உழுதல், எரு இடுதல், களை பிடுங்குதல், நீர் பாய்ச்சல், காத்தல் என்கிற ஐந்தும் ஆம்.

பொருள் : பயிர்களை அதுவது விளையும் பக்குவகாலத்திலே வேண்டும் முயற்சியில் வழுவாமல் இடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. மன்றுபறித் துண்ணேல்

பதவுரை : மன்று - தரும சபையிலே இருந்து கொண்டு, பறித்து - (வழக்குத் தீர்ப்புக்கு வருங் குடிகளுடைய பொருளைக்) கவர்ந்து, உண்ணேல் - நீ சீவனம் பண்ணாதே.

பொருள் : தரும சபையிலே இருந்து கொண்டு வழக்குத் தீர்ப்புக்கு வருங் குடிகளுடைய பொருளைக் கவர்ந்து நீ சீவனஞ் செய்யாதே.

## 24. இயல்பலா தனசெயேல்

பதவுரை : இயல்பு அலாதன - (தரும நூலுக்குப்) பொருத்த மல்லாதவைகளை, செயேல் - நீ செய்யாதே.

பொருள் : தரும நூலுக்குப் பொருத்தமல்லாதவைகளை நீ செய்யாதே.

## 25. அரவ மாட்டேல்

பதவுரை : அரவம் - (நஞ்சையுடைய) பாம்புகளை, ஆட்டேல் - (நீ பிடித்து) ஆட்டாதே.

பொருள் : நஞ்சையுடைய பாம்புகளை நீ பிடித்து ஆட்டாதே.

## 26. இலவம்பஞ் சிற்றுயில்

பதவுரை : இலவம் பஞ்சில் - இலவம் பஞ்சு மெத்தையிலே, துயில் - நீ நித்திரை செய்.

பொருள் : இலவம் பஞ்சு மெத்தையிலே நீ நித்திரை செய்.

## 27. வஞ்சகம் பேசேல்

பதவுரை : வஞ்சகம் - கபட வார்த்தைகளை, பேசேல் - நீ பேசாதே.

பொருள் : கபட வார்த்தைகளை நீ பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. அழகலாதன செயேல்

பதவுரை : அழகு அலாதன - (நீ துன்பப்பட வந்த காலத்தும்) இழிவுள்ள செயல்களை, செயேல் - செய்யாதே.
அழகுடையன உயர்வுள்ள செயல்கள், ஆதலால், அழகலாதன இழிவுள்ள செயல்கள் என்பதாம்.

பொருள் : நீ துன்பப்பட வந்த காலத்தும் இழிவுள்ள செயல்களைச் செய்யாதே.

## 29. இளமையிற் கல்

பதவுரை : இளமையில் - இளமைப் பிராயத்திலே, கல் - (நீ வித்தையைக்) கற்றுக் கொள்.

பொருள் : இளமைப் பிராயத்திலே நீ வித்தையைக் கற்றுக் கொள்.

## 30. அறனை மறவேல்

பதவுரை : அறனை - தருமத்தை, மறவேல் - (நீ ஒரு போதும்) மறவாதே.

பொருள் : தருமத்தை நீ ஒரு போதும் மறவாதே.

## 31. அனந்த லாடேல்

பதவுரை : அனந்தல் - நித்திரையை, ஆடேல் - (நீ அதிகமாகச்) செய்யாதே.

பொருள் : நித்திரையை நீ அதிகமாகச் செய்யாதே.

## 32. கடிவது மற

பதவுரை : கடிவது - (ஒருவரைச்) சினந்து பேசுவதை, மற - நீ மறந்துவிடு.

பொருள் : ஒருவரைச் சினந்து பேசுவதை நீ மறந்துவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33. காப்பது விரதம்

பதவுரை : காப்பது - (உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் அவை களைக்) காப்பாற்றுவதே, விரதம் - விரதமாம்.

பொருள் : உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் அவைகளைக் காப்பாற்றுவதே விரதமாம்.

## 34. கிழமைப் படவாழ்

பதவுரை : கிழமைப்பட-(உன்னிடத்தில் உள்ள பொருள் பிறருக்கும்) உரிமைப்படும்படி, வாழ் - நீ வாழு.

பொருள் : உன்னிடத்தில் உள்ள பொருள் பிறருக்கும் உரிமைப் படும்படி நீ வாழு.

## 35. கீழ்மை யகற்று

பதவுரை : கீழ்மை - கீழ்மையாகிய குணத்தை, அகற்று - நீ நீக்கு.

பொருள் : கீழ்மையாகிய குணத்தை நீ நீக்கு.

## 36. குணமது கைவிடேல்.

பதவுரை : குணமது - (மேலாகிய) குணத்தை, கை விடேல் - நீ கை விடாதே.

பொருள் : மேலான குணத்தை நீ கை விடாதே.

## 37. கூடிப் பிரியேல்

பதவுரை : கூடி (நல்லவரோடு) சிநேகித்து, பிரியேல் - (நீ பின் அவரை விட்டு) நீங்காதே.

பொருள் : நல்லவரோடு சிநேகித்து நீ பின் அவரை விட்டு நீங்காதே.

## 38. கெடுப்ப தொழி

பதவுரை : கெடுப்பது - பிறருக்குக் கேடு செய்வதை, ஒழி - நீ விட்டு விடு.

பொருள் : பிறருக்குக் கேடு செய்வதை நீ விட்டுவிடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. கேள்வி முயல்

பதவுரை : கேள்வி - (கற்றவர் சொல்லும்) நூற் பொருளைக் கேட்ப தற்கு, முயல் - நீ முயற்சி செய்.

பொருள் : கற்றவர் சொல்லும் நூற் பொருளைக் கேட்பதற்கு நீ முயற்சி செய்.

## 40. கைவினை கரவேல்

பதவுரை : கைவினை - (உனக்குத் தெரிந்த) கைத்தொழிலை, கரவேல் - நீ (சமயத்திலே) ஒளியாதே.

பொருள் : உனக்குத் தெரிந்த கைத்தொழிலை நீ சமயத்திலே ஒளியாதே.

## 41. கொள்ளை விரும்பேல்

பதவுரை : கொள்ளை - (பிறருடைய பொருளைக்) கொள்ளையிடு வதற்கு, விரும்பேல் - நீ ஆசைப்படாதே.

பொருள் : பிறருடைய பொருளைக் கொள்ளையிடுவதற்கு நீ ஆசைப்படாதே.

## 42. கோதாட் டொழி

பதவுரை : கோது - குற்றம் பொருந்திய, ஆட்டு - விளையாட்டை, ஒழி - நீ நீக்கு.

பொருள் : குற்றம் பொருந்திய விளையாட்டை நீ நீக்கு.

## 43. சக்கர நெறிநில்

பதவுரை : சக்கர நெறி - (அரசனுடைய ஆஞ்ஞையாகிய சக்கரஞ் செல்லும் வழியிலே, நில் - (நீ அடங்கி) நில், (அரசனுடைய கட்டளைக்கு அமைந்து நட என்பது கருத்து)

பொருள் : அரசனுடைய ஆஞ்ஞையாகிய சக்கரஞ் செல்லும் வழியிலே நீ அடங்கி நில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44. சான்றோ ரினத்திரு

பதவுரை : சான்றோர் - அறிவினாலே நிறைந்தவர்களுடைய, இனத்து - கூட்டத்திலே, இரு - (நீ எந்நாளுஞ் சேர்ந்து) இரு.

பொருள் : அறிவினாலே நிறைந்தவர்களுடைய கூட்டத்திலே நீ எந்நாளுஞ் சேர்ந்து இரு.

## 45. சித்திரம் பேசேல்

பதவுரை : சித்திரம் - மெய்போலத் தோன்றும் பொய் மொழிகளை, பேசேல் - நீ பேசாதே.

பொருள் : மெய்போலத் தோன்றும் பொய் மொழிகளை நீ பேசாதே.

## 46. சீர்மை மறவேல்

பதவுரை : சீர்மை - புகழுக்கு ஏதுவாகிய குணத்தை, மறவேல் - நீ மறந்து விடாதே.

பொருள் : புகழுக்கு ஏதுவாகிய குணத்தை நீ மறந்து விடாதே.

## 47. சுளிக்கச் சொல்லேல்

பதவுரை : சுளிக்க - (கேட்பவர்) கோபிக்கும் படியாக, சொல்லேல் - (நீ ஒன்றையும்) பேசாதே.

பொருள் : கேட்பவர் கோபிக்கும் படியாக நீ ஒன்றையும் பேசாதே.

## 48. சூது விரும்பேல்

பதவுரை : சூது - சூதாடலை, விரும்பேல் - (நீ ஒரு போதும்) விரும்பாதே.

பொருள் : சூதாடலை நீ ஒரு போதும் விரும்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49. செய்வன திருந்தச்செய்

பதவுரை : செய்வன - செய்யுங் காரியங்களை, திருந்த - செவ்வையாக, செய் - நீ செய்.

பொருள் : செய்யுங் காரியங்களைச் செவ்வையாக நீ செய்.

## 50. சேரிட மறிந்துசேர்

பதவுரை : சேர் இடம் - அடையத் தகும் (நன்மையாகிய) இடத்தை, அறிந்து - தெரிந்து, சேர் - நீ அடை.

பொருள் : நன்மையுள்ள அடையத் தகும் இடத்தைத் தெரிந்து நீ அடை.

## 51. சையெனத் திரியேல்

பதவுரை : சை என - (பெரியோர் உன்னைச்) 'சீ' என்று அருவருக்கும்படி, திரியேல் - (நீ துட்டனாய்த்) திரியாதே.

பொருள் : பெரியோர் உன்னைச் 'சீ' என்று அருவருக்கும்படி நீ துட்டனாய்த் திரியாதே.

## 52. சொற்சோர்வு படேல்

பதவுரை : சொல் - (நீ பிறரோடு பேசும்) சொற்களிலே, சோர்வுபடேல் - மறதிபடப் பேசாதே. (சொல்ல வேண்டுவதை மறவாமற் சொல்) என்பது கருத்து.

பொருள் : நீ பிறரோடு பேசுஞ் சொற்களிலே, மறதிபடப் பேசாதே.

## 53. சோம்பித் திரியேல்

பதவுரை : சோம்பி (நீ செய்ய வேண்டும் முயற்சியைச் செய்யாமல்) சோம்பல் கொண்டு, திரியேல் - (வீணாகத்) திரியாதே.

பொருள் : நீ செய்ய வேண்டும் முயற்சியைச் செய்யாமற் சோம்பல் கொண்டு வீணாகத் திரியாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 54. தக்கோ னெனத்திரி

பதவுரை : தக்கோன் என - (உன்னைப் பெரியோர்கள்) யோக்கியவன் என்று புகழும்படி, திரி - நீ திரி.

பொருள் : உன்னைப் பெரியவர்கள் யோக்கியவன் என்று புகழும்படி நீ திரி.

## 55. தானமது விரும்பு

பதவுரை : தானமது - ( சற்பாத்திரங்களிலே) தானஞ் செய்தலை, விரும்பு - நீ விரும்பு.

பொருள் : சற்பாத்திரங்களிலே தானஞ் செய்தலை நீ விரும்பு.

## 56. திருமாலுக் கடிமைசெய்

பதவுரை : திருமாலுக்கு - விஷ்ணுவுக்கு, அடிமை செய் - நீ தொண்டு பண்ணு.

பொருள் : விஷ்ணுவுக்கு நீ தொண்டு பண்ணு.

## 57. தீவினை யகற்று

பதவுரை : தீவினை - பாவச் செயல்களை, அகற்று - (நீ செய்யாமல்) நீக்கு.

பொருள் : பாவச் செயல்களை நீ செய்யாமல் நீக்கு .

## 58. துன்பத்திற் கிடங்கொடேல்.

பதவுரை : துன்பத்திற்கு - (தொழில் செய்யும் போது) முயற்சியினாலே வருஞ் சரீரப் பிரயாசத்தால் ஆகிய துன்பத்துக்கு, இடம் கொடேல் - (நீ சிறிதாயினும்) இடங் கொடாதே. (அத்துன்பத்தை இன்பமென்று கொண்டு முயற்சியை விடாது செய் என்பது கருத்து)

பொருள் : தொழில் செய்யும் போது முயற்சியினாலே வருஞ் சரீரப் பிரயாசத்தால் ஆகிய துன்பத்துக்கு நீ சிறிதும் இடங் கொடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 59. தூக்கி வினைசெய்

பதவுரை : தூக்கி - (முடிக்கும் உபாயத்தை) ஆராய்ந்து, வினை - ஒரு தொழிலை, செய் - (நீ அதன் பின்பு) செய்.

பொருள் : முடிக்கும் உபாயத்தை ஆராய்ந்து ஒரு தொழிலை நீ அதன் பின்பு செய்.

## 60. தெய்வ மிகழேல்

பதவுரை : தெய்வம் - கடவுளை, இகழேல் - (நீ மறந்தாயினும்) இகழாதே.

பொருள் : கடவுளை நீ மறந்தாயினும் இகழாதே.

## 61. தேசத்தோ டொத்துவாழ்

பதவுரை : தேசத்தோடு - நீ வசிக்குந் தேசத்திலுள்ளவர்களுடனே, ஒத்து - (பகையில்லாமல்) ஒத்து, வாழ் - வாழு.

பொருள் : நீ வசிக்குந் தேசத்திலுள்ளவர்களுடனே ஒத்துப் பகையில்லாமல் வாழு.

## 62. தையல்சொற் கேளேல்

பதவுரை : -(உன்) மனைவியுடைய, சொல் - சொல்லை, கேளேல் - நீ கேட்டு நடவாதே.

பொருள் : உன் மனைவியுடைய சொல்லை நீ கேட்டு நடவாதே.

## 63. தொன்மை மறவேல்

பதவுரை : தொன்மை - பழமையாகிய சிநேகத்தை, மறவேல் - நீ மறந்து விடாதே.

பொருள் : பழமையாகிய சிநேகத்தை நீ மறந்து விடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 64. தோற்பன தொடரேல்

பதவுரை : தோற்பன - தோல்வியடையக் கூடிய வழக்குகளிலே, தொடரேல் - நீ சம்பந்தப்படாதே.

பொருள் : தோல்வியடையக் கூடிய வழக்குகளிலே நீ சம்பந் தப்படாதே.

## 65. நன்மை கடைப்பிடி

பதவுரை : நன்மை - புண்ணியத்தையே, கடைப்பிடி - (நீ விடாமல்) உறுதியாகப்பிடி.

பொருள் : புண்ணியத்தையே நீ விடாமல் உறுதியாகப் பிடி.

## 66. நாடொப் பனசெய்

பதவுரை : நாடு - நாட்டில் உள்ளோர் பலரும், ஒப்பன - ஒத்துக் கொள்ளத்தக்க நல்ல காரியங்களை, செய் - நீ செய்.

பொருள் : நாட்டில் உள்ளோர் பலரும் ஒத்துக்கொள்ளத்தக்க நல்ல காரியங்களை நீ செய்.

## 67. நிலையிற் பிரியேல்

பதவுரை : நிலையில் - (நீ நிற்கின்ற உயர்ந்த) நிலையிலே நின்று, பிரியேல் - (ஒரு போதும்) நீங்காதே.

பொருள் : நீ நிற்கின்ற உயர்ந்த நிலையிலே நின்று ஒரு போதும் நீங்காதே

## 68. நீர்விளை யாடேல்

பதவுரை : நீர் - (ஆழம் உள்ள) நீரிலே, விளையாடேல் - நீ (நீந்தி) விளையாடாதே.

பொருள் : ஆழம் உள்ள நீரிலே நீ நீந்தி விளையாடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 69. நுண்மை நுகரேல்

பதவுரை : நுண்மை - (நோயைத் தருகின்ற) சிற்றுண்டிகளை, நுகரேல் - நீ உண்ணாதே.

பொருள் : நோயைத் தருகின்ற சிற்றுண்டிகளை நீ உண்ணாதே.

## 70. நூல்பல கல்

பதவுரை : நூல் பல - (அறிவை வளர்க்கின்ற) நூல்கள் பலவற்றையும், கல் - நீ கற்றுக்கொள்.

பொருள் : அறிவை வளர்க்கின்ற நூல்கள் பலவற்றையும் நீ கற்றுக் கொள்.

## 71. நெற்பயிர் விளை

பதவுரை : நெற்பயிர் - நெல்லுப் பயிரை, விளை - (நீ வேண்டிய முயற்சி செய்து) விளைவி.

பொருள் : நெல்லுப் பயிரை நீ வேண்டிய முயற்சி செய்து விளைவி.

## 72. நேர்பட வொழுகு

பதவுரை : நேர்பட - (உன் ஒழுக்கங் கோணாமல்) செவ்வைப்பட, ஒழுகு - நீ நட.

பொருள் : உன் ஒழுக்கங் கோணாமற் செவ்வைப்பட நீ நட.

## 73. நைவினை நணுகேல்

பதவுரை : நை - (பிறர்) கெடத்தக்க, வினை - (தீ) வினைகளை, நணுகேல் - (நீ ஒருபோதும்) சாராதே.

பொருள் : பிறர் கெடத்தக்க தீ வினைகளை நீ ஒரு போதுஞ் சாராதே.

## 74. நொய்ய வுரையேல்

பதவுரை : நொய்ய - (பயன் இல்லாத) அற்ப வார்த்தைகளை, உரையேல் - (நீ ஒரு போதும்) சொல்லாதே.

பொருள் : பயன் இல்லாத அற்ப வார்த்தைகளை நீ ஒரு போதுஞ் சொல்லாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**75. நோய்க் கிடங்கொடேல்**

பதவுரை : நோய்க்கு - வியாதிகளுக்கு, இடங்கொடேல் - (அவபத்தியம் முதலானவைகளைச் செய்து) இடங்கொடாதே.

பொருள் : வியாதிகளுக்கு அவபத்தியம் முதலானவைகளைச் செய்து இடங்கொடாதே.

**76. பழிப்பன பகரேல்**

பதவுரை : பழிப்பன - (அறிவுடையார்களாலே) பழிக்கப்படுவனவாகிய இழிசொற்களை, பகரேல் - நீ பேசாதே.

இழிச் சொற்களாவன: பொய், குறளை, கடுஞ்சொல், பயனிற்சொல் என்கின்ற நான்குமாம்.

பொருள் : அறிவுடையார்களாலே பழிக்கப்படுவனவாகிய இழி சொற்களை நீ பேசாதே.

**77. பாம்பொடு பழகேல்**

பதவுரை : பாம்பொடு - (பால் கொடுத்தவருக்கும் விஷத்தைக் கொடுக்கிற) பாம்பைப் போல்வர்களுடனே, பழகேல் - நீ சகவாசஞ் செய்யாதே.

பொருள் : பால் கொடுத்தவருக்கும் விஷத்தைக் கொடுக்கின்ற பாம்பைப் போல்வர்களுடனே நீ சகவாசஞ் செய்யாதே.

**78. பிழைபடச் சொல்லேல்**

பதவுரை : பிழைபட - வழுக்கள் உண்டாகும் படி, சொல்லேல் - (நீ ஒன்றையும்) பேசாதே.

பொருள் : வழுக்கள் உண்டாகும் படி நீ ஒன்றையும் பேசாதே.

**79. பீடு பெறநில்**

பதவுரை : பீடு - பெருமையை பெற - பெறும்படியாக, நில் - (நீ நல்ல வழியிலே) நில்.

பொருள் : பெருமையைப் பெறும்படியாக நீ நல்ல வழியிலே நில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்

பதவுரை : புகழ்ந்தாரை - உன்னைத் துதிசெய்து அடுத்த வரை, போற்றி - (கைவிடாமற்) காப்பாற்றி, வாழ் - நீ வாழு.

பொருள் : உன்னைத் துதிசெய்து அடுத்தவரைக் கைவிடாமற் காப்பாற்றி நீ வாழு.

## 81. பூமி திருத்தியுண்

பதவுரை : பூமி - உன் விளை நிலத்தை, திருத்தி - சீர் திருத்திப் பயிர் செய்து, உண் - நீ உண்ணு.

பொருள் : உன் விளை நிலத்தைத் திருத்திப் பயிர் செய்து நீ உண்ணு.

## 82. பெரியாரைத் துணைக்கொள்

பதவுரை : பெரியாரை - (அறிவிலே சிறந்த) பெரியோரை, துணைக்கொள் - உனக்குத் துணையாகப் பேணிக் கொள்.

பொருள் : அறிவிலே சிறந்த பெரியோரை, உனக்குத் துணையாகப் பேணிக் கொள்.

## 83. பேதைமை யகற்று

பதவுரை : பேதமை - (பிறவிக்குக் காரணமாகிய) அஞ்ஞானத்தை, அகற்று - (நீ மெய்ஞ்ஞானத்தினாலே) போக்கு.

பொருள் : பிறவிக்குக் காரணமாகிய அஞ்ஞானத்தை நீ மெய்ஞ் ஞானத்தினாலே போக்கு.

## 84. பையலோ டிணங்கேல்

பதவுரை : பையலோடு - சிறு பிள்ளையோடு, இணங்கேல் - நீ கூடாதே.

பொருள் : சிறு பிள்ளையோடு நீ கூடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**85. பொருடனைப் போற்றிவாழ்**

பதவுரை : பொருள் தனை - திரவியத்தை, போற்றி - (மேன்மேலும் உயரும்படி) காத்து, வாழ் - நீ வாழு.

பொருள் : திரவியத்தை மேன்மேலும் உயரும்படி காத்து நீ வாழு

**86. போர்த்தொழில் புரியேல்.**

பதவுரை : போர் - சண்டையாகிய, தொழில் - தொழிலை, புரியேல் - நீ செய்யாதே.

பொருள் : சண்டையாகிய தொழிலை நீ செய்யாதே

**87. மனந் தடுமாறேல்**

பதவுரை : மனம் - மனசு, தடுமாறேல் - (யாதொரு விஷயத்திலும்) கலங்காதே.

பொருள் : மனசு யாதொரு விஷயத்திலுங் கலங்காதே.

**88. மாற்றானுக் கிடங்கொடேல்**

பதவுரை : மாற்றானுக்கு - பகைவனுக்கு, இடம் கொடேல் - (உன்னை நெருங்கிப் பின் வருத்தும் படியாக நீ) இடங்கொடாதே.

பொருள் : பகைவனுக்கு, உன்னை நெருங்கிப் பின் வருத்தும் படியாக நீ இடங்கொடாதே.

**89. மிகைபடச் சொல்லேல்.**

பதவுரை : மிகைபட - (சொற்கள் சுருங்காமல்) அதிகப்படும்படி, சொல்லேல் - நீ சொல்லாதே.

பொருள் : சொற்கள் சுருங்காமல் அதிகப்படும்படி நீ சொல்லாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 90. மீதூண் விரும்பேல்

பதவுரை : மீது ஊண் - அதிக போசனத்துக்கு, விரும்பேல் - நீ ஆசைப்படாதே.

பொருள் : அதிக போசனத்துக்கு நீ ஆசைப்படாதே.

## 91. முனைமுகத்து நில்லேல்

பதவுரை : முனைமுகத்து - சண்டை முகத்திலே, நில்லேல் - (நீ போய்) நில்லாதே.

பொருள் : சண்டை முகத்திலே நீ போய் நில்லாதே.

## 92. மூர்க்கரோ டிணங்கேல்

பதவுரை : மூர்க்கரோடு - அறிவில்லாதவர்களுடனே, இணங்கேல் - நீ சிநேகம் பண்ணாதே.

பொருள் : அறிவில்லாதவர்களுடனே நீ சிநேகம் பண்ணாதே.

## 93. மெல்லினல்லா டோள்சேர்

பதவுரை : மெல் - மெல்லிய, இல் - (உன்) மனையாட்டியாகிய, நல்லாள் - பெண்ணினுடைய, தோள் - தோள்களையே, சேர் - நீ புணர். இதனாலே பிறர் மனைவியர், பரத்தையர் என்கின்ற இவர்களுடைய தோள்களை ஒரு போதும் புணராதே என்பது பெறப்படும்.

பொருள் : மெல்லிய உன் மனையாட்டியாகிய பெண்ணினுடைய தோள்களையே நீ புணர்.

## 94. மேன்மக்கள் சொற்கேள்

பதவுரை : மேன்மக்கள் - மேன்மையாகிய மனிதருடைய, சொல் - சொல்லை, கேள் - நீ கேட்டு நட.

பொருள் : மேன்மையாகிய மனிதருடைய சொல்லை நீ கேட்டு நட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**95. மைவிழியார் மனையகல்**

பதவுரை : மை விழியார் - மை தீட்டிய கண்களையுடைய, வேசிகளது, மனை - வீட்டை, அகல் - (நீ ஒரு போதுங் கிட்டாமல்) அகன்று போ.

பொருள் : மை தீட்டிய கண்களையுடைய வேசிகளது வீட்டை நீ ஒரு போதுங் கிட்டாமல் அகன்று போ.

**96. மொழிவ தறமொழி**

பதவுரை : மொழிவது - சொல்லப்படும் பொருளை, அற - (சந்தேகம்) நீங்கும்படி, மொழி - நீ சொல்லு.

பொருள் : சொல்லப்படும் பொருளைச் சந்தேகம் நீங்கும் படி நீ சொல்லு.

**97. மோகத்தை முனி**

பதவுரை : மோகத்தை - (நிலையாத பொருள்களின் மேலதாகிய) ஆசையை, முனி - நீ கோபித்து விலக்கு.

பொருள் : நிலையாத பொருள்களின் மேலதாகிய ஆசையை நீ கோபித்து விலக்கு.

**98. வல்லமை பேசேல்**

பதவுரை : வல்லமை - (உன்னுடைய) சாமர்த்தியத்தை, பேசேல் - (நீ புகழ்ந்து) பேசாதே.

பொருள் : உன்னுடைய சாமர்த்தியத்தை நீ புகழ்ந்து பேசாதே.

**99. வாது முற்கூறேல்**

பதவுரை : வாது - வாதுகளை, முன் - (பெரியோர்) முன்னே, கூறேல் - நீ பேசாதே. (வாது - தருக்கம்) பெரியோர்களிடத்தில் முற்பட்டு வாதாடாதே.

பொருள் : வாதுகளைப் பெரியோர் முன்னே நீ பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 100. வித்தை விரும்பு

பதவுரை : வித்தை - கல்விப் பொருளையே, விரும்பு - நீ விரும்பு.

பொருள் : கல்விப் பொருளையே நீ விரும்பு.

## 101. வீடு பெறநில்

பதவுரை : வீடு - மோக்ஷத்தை, பெற - அடையும்படி, நில் - (அதற்குரிய ஞானவழியிலே) நில்.

பொருள் : மோக்ஷத்தை அடையும்படி அதற்குரிய ஞான வழியிலே நில் .

## 102. உத்தமனா யிரு

பதவுரை : உத்தமனாய் - (நற்குண நற்செய்கைகளினாலே எல்லாரினும்) மேலானவனாகி, இரு - நீ இரு.

பொருள் : நற்குண நற்செய்கைகளினாலே எல்லாரினும் மேலானவனாகி நீ இரு.

## 103. ஊருடன் கூடிவாழ்

பதவுரை : ஊருடன் - ஊரவர்களுடனே, கூடி - (சுபாசுபகன்மங்களிலே) அளாவி வாழ் - நீ வாழு

பொருள் : ஊரவர்களுடனே சுபாசுபகன்மங்களிலே அளாவி நீ வாழு.

## 104. வெட்டெனப் பேசேல்

பதவுரை : வெட்டு என - கத்தி வெட்டைப் போல, பேசேல் - நீ (ஒருவரோடுங் கடினமாகப்) பேசாதே.

பொருள் : கத்திவெட்டைப் போல நீ ஒருவரோடுங் கடினமாகப் பேசாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 105. வேண்டி வினைசெயேல்

பதவுரை : வேண்டி - (யாதொரு பிரயோசனத்தை) விரும்பி, வினை - தீவினையை, செயேல் - (நீ ஒருவ ருக்கும்) செய்யாதே.

பொருள் : யாதொரு பிரயோசனத்தை விரும்பியுந் தீவினையை நீ ஒருவருக்குஞ் செய்யாதே.

## 106. வைகறைத் துயிலெழு

பதவுரை : வைகறை - (நீ தினந்தோறும்) விடியற் காலத்திலே, துயில் - நித்திரையை விட்டு, எழு - எழுந்திரு.

பொருள் : நீ தினந்தோறும் விடியற் காலத்திலே நித்திரை விட்டு எழுந்திரு.

## 107. ஒன்னாரைத் தேறேல்

பதவுரை : ஒன்னாரை — பகைவர்களை, தேறேல் - (நீ ஒருபோதும்) நம்பாதே.

பொருள் : பகைவர்களை நீ ஒரு போதும் நம்பாதே.

## 108. ஓரஞ் சொல்லேல்.

பதவுரை : ஓரம் - பக்ஷபாதத்தை, சொல்லேல் - (நீ யாதொரு வழக்கிலும்) பேசாதே.

பொருள் : பக்ஷபாதத்தை நீ யாதொரு வழக்கிலும் பேசாதே

ஆத்திசூடி மூலமும் உரையும் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் வாழ்க்கையிற் சில சம்பவங்கள்

❖ 1822 டிசம்பர் 18 - பிறப்பு. அவிட்ட நட்சத்திரத்திற் ப. கந்தப்பிள்ளைக்கும் சிவகாமியாருக்கும் பிறந்தார்.

❖ 1827 - வித்தியாரம்பம். சிறிய தமிழ்ப் பள்ளிக் கூடத்தில் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடமும் வேலாயுத முதலியாரிடமுங் கற்றல்.

❖ 1834 ஆகஸ்ட் - பீற்றர் பார்சிவல் பாதிரியார் நடாத்திய யாழ். வெஸ்லியன் மிசன் கல்லூரிக்கு ஆங்கிலங் கற்கச் செல்லல். சரவணமுத்து உபாத்தியாயரிடமுஞ் சேனாதிராய முதலியாரிடமுங் கற்றல்.

❖ 1841 - பார்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளுக்கிணங்க யாழ். வெஸ்லியன் மிசன் கல்லூரியிற் தமிழ், ஆங்கில ஆசிரியராதல். பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதராக நியமனம். பாதிரியாருடன் சேர்ந்து விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்க்க ஆரம்பித்தல்.

❖ 1841 செப்டம்பர் 2 - நயன சாஸ்திர வினா என்ற தலைப்பில் உதயதாரகையில் எழுதிய தமிழ், ஆங்கிலக் கடிதங்கள் மூலம் "கட்புலன்" பற்றிய தமது சந்தேகத்தை வெளியிடல், இது அவரது முதலாவது எழுத்தாகத் தோன்றுகிறது. இதன் தொடர்ச்சியாகப் பல கடிதங்கள் உதயதாரகையில் வெளிவந்தன.

❖ 1842 ஆனி 2 - தந்தையார் மரணம். அவர் பாடத் தொடங்கியிருந்த "இரத்தினவல்லி விலாசம்" நாட கத்தினைப் பாடிப் பூர்த்தி செய்தல் .

❖ 1846 ஜனவரி - சைவ சமயப்பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடம் படிப்பித்தல்

❖ 1846 ஜூன் 8 - அம்பலவாணமுதலியாருடன், சென்னை வித்தியாசாலைகளையும் வித்துவான்களையுங் காண்பதற்காக இந்தியா செல்லல். இதுவே அவரது முதலாவது இந்தியப் பிரயாணமாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1847 டிசம்பர் 31 - வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் முதன் முதலாகக் கிறீஸ்து மதப் பிரசாரத்தை எதிர்த்துச் (கண்டித்து) சைவப் பிரசங்கம்.

- 1848 மார்ச் - ஜூலை - இந்தியப் பிரயாணம். பார்சிவல் பாதிரி யாருடைய தென்னிந்தியத் தேவாலயத்தில் விவிலிய நூலின் யாழ்ப்பாண மொழி பெயர்ப்பை ஒப்புவிக்கச் செல்லல். ஸ்போல்டிங் பண்டிதர், சந்திரசேகர பண்டிதருடன் ஆறுமுகநாவலர் உடன்வரத் தாமுஞ் சென்னை சென்றதாக ஆணல்ட் சதாசிவம்பிள்ளை கூற்று.

- 1848 ஆவணி 5 வண்ணார்பண்ணையிற் சைவப்பிரகாச வித்தியாசாலை தாபித்தல்.

- 1848 செப்டெம்பர் - பார்சிவல் பாதிரியார் பாடசாலையிற் பார்த்த உத்தியோகத்தைத் துறத்தல், இதன் நோக்கம், முழுநேரத்தையுஞ் சமய, சமூக, இலக்கியப் பணிக்கு அர்ப்பணித்தல்.

- 1849 ஜூலை - இந்தியப் பிரயாணம், நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் அச்சியந்திரம் வாங்குவதற்குச் செல்லல். திருவாவடுதுறை ஆதீனத்தால் "நாவலர்" பட்டம் வழங்கப்பெறல். சூடாமணி நிகண்டு உரை, சௌந்தர்யலகரி உரை பதிப்பிக்கப்படல். யாழ்ப்பாணத் திற்கு வந்து "வித்தியாநுபாலன யந்திரம்" என்னும் அச்சியந்தி ரசாலை தாபித்தல்

- 1850 -51 - முதாலாம், இராண்டாம், நான்காம் பால பாடங்களும் நீதி நூல்களும் எழுதி அச்சிடல். (மூன்றாம் பாலபாடமே பின்னர் நான்காம் பாலபாடமாக வெளிவந்தது).

- 1851 பங்குனி - திருச்செந்தினிரோட்டக யமக அந்தாதி உரை அச்சிடல்.

- 1851 ஏப்பிரல் - கொலைமறுத்தல் என்னும் பிரசாரத்தை அச்சிடல் .

- 1851 அக்டோபர் - நன்னூல் விருத்தியுரை அச்சிடல். சிவாலய தரிசன விதி இயற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ 1852 ஏப்பிரல் - பெரியபுராண வசனம் எழுதித் தயாரித்தல்.

❖ 1853- திருமுருகாற்றுப்படை உரை இயற்றல்.

❖ 1854 - சைவதூஷண பரிகாரம். சுப்பிரபோதம், வச்சிர தண்டம் ஆகியன அச்சிடல். சைவதூஷண பரிகாரத்திற் சைவ சமயம் பற்றிய கிறிஸ்தவ மிசனரிகளின் தாக்குதலை எதிர்த்தார் .

❖ 1854அக்போடபர் - இந்தியப்பிரயாணம். நல்லூர் சதாசிவம்பிள்ளை யுடன் செல்லல். பிரம்மசாரியம் ஏற்றுச் சிவபூசை எழுந்தருளப் பண்ணச் சென்றமை.

❖ 1855 - வெஸ்லியன் மெதடிஸ்த ஆண்டறிக்கையிற் சைவ தூஷண பரிகாரத்துக்குப் பாராட்டு.

❖ 1857 டிசம்பர் - தாயார் மரணம்.

❖ 1858 பெப்ரவரி 14 - சைவ வித்தியாசாலைக்குப் பணஞ் சேர்க்கும் பொருட்டு அதன் வரலாற்றைப் பிரசங்கஞ் செய்தல்.

❖ 1858 ஜூலை - இந்தியப் பிரயாணம். நூல்கள் அச்சிடவுஞ் சென் னையில் வித்தியாநுபாலன அச்சியந்திரசாலை தாபிக்கவுஞ் செல்லல்.

❖ 1859 மே - திருவாசகமூலம், திருக்கோவையார் மூலம் என்பவற்றைப் பரிசோதித்து, மாணவர் சதாசிவப்பிள்ளை பெயரால் அச்சிட்டு வெளியிடல். வேறு நூல்களும் அச்சிடல்

❖ 1860 - திருவண்ணாமலையில் உருத்திராக்கஞ் சூட்டப் பெறல்.

❖ 1860 அக்டோபர் - திருக்கோவையார் உரை அச்சிடல்.

❖ 1861 மே - திருக்குறள் பரிமேலழகர் உரை, தருக்கசங்கிரகம் (அன்னம்பட்டீயம்) ஆகியன அச்சிடல்.

❖ 1861 ஆவணி - கந்தபுராண வசனம் பதிப்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1862 மே - சிதம்பரத்திற் சைவ வித்தியாசாலை நிறுவும் பொருட்டு, வண்ணை சைவ வித்தியாசாலையிற் பிரசங்கம்.

- 1862ஜூலை - மேற்படிக் காரணத்திற்காகப் பருத்தித்துறைச் சித்தி விநாயகர் கோவிலிற் பிரசங்கம்.

- 1863 மார்கழி - இந்தியப் பிரயாணம். இராமநாதபுரத்திற் பொன்னுச்சாமி தேவருடன் பிணக்குஞ் சந்திப்புஞ் சாதுரா சாத்துப்படலும்

- 1864 ஜனவரி - தலயாத்திரை (நோக்கம் - சிதம்பரத்தில் வித்தியா சாலை ஒன்றைத் தாபித்தல்)

- 1864 அக்டோபர் 28 - சிதம்பர வித்தியாசாலை தாபித்தல்.

- 1864 - திருவிளையாடற் புராண வசனம் அச்சிடல், சேது புராணம், இலக்கண விளக்கச் சூறாவளி அச்சிடும் பணி.

- 1866 நவம்பர் - சேதுபுராணம், இலக்கண விளக்கச் சூறாவளி அச்சிடல். தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணக் கொத்து என்பன அச்சிடல்.

- 1866 - அருட்பா பதிப்பு. (இது அகத்தியர் தேவாரத் திரட்டு, திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணச் செய்யுட்டிரட்டு ஆகியன சேர்ந்த தொகுப்பு)

- 1867-சிதம்பரத்திற் தீக்ஷிதர்கள் ஆடு வெட்டி வேள்வி செய்ய முயன்றமையைத் தடுத்தல். திருத்தொண்டை நாட்டுப் புண்ணிய பரிபாலன சபைத் தலைவராக நியமனம். சிறந்த சொற்பொழிவொன்று ஆற்றல்.

- 1867 ஆனி -சிதம்பர மும்மணிக்கோவை பதிப்பித்தல் .

- 1867 ஐப்பசி -அருணகிரிநாதர் திருவகுப்புப் பதிப்பித்தல்

- 1868 ஜனவரி - கோயிற்புராண உரை வெளியிடல் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ 1868 செப்டம்பர் - சைவசமய நெறியுரை வெளியிடல், தொல் காப்பியஞ் சேனாவரையம் பரிசோதித்தல் .

❖ 1869 - சிதம்பரத்திலும் வேதாகம பாடசாலை, மடம் என்பன நிறுவிச் சைவப்பிரசாரகர்களை உருவாக்கும் முயற்சிக்கு நிதி சேர்க்கும் பொருட்டு விண்ணப்பஞ் செய்தல் .

❖ 1869 பெப்ரவரி - வீராசாமி முதலியாரின் "விஞ்ஞானப் பத்திரிகை" நாவலர் மீதுஞ் சி.வை தாமோதரம்பிள்ளை மீதுங் கண்டனம். நல்லறிவுச் சுடர் கொளுத்தலில்" வீராசாமி முதலியாருக்கு நாவலர் மறுப்பு .

❖ 1869 வைகாசி - பதினோராந் திருமுறை பதிப்பித்தல்.

❖ 1869 ஆனி - சிதம்பரத்தில் இராமலிங்கர் தமது "பேரம் பலப் பிரசாரத்தில்" நாவலரை அவதூறு செய்தல்.

❖ 1869 கார்த்திகை - கந்தபுராணம் அச்சிடல் .

போலியருட்பா மறுப்பு வெளியிடல். இதில் நாவலர் தாம் இராம லிங்கப்பிள்ளையை எதிர்த்தமைக்கான காரணங்களைத் தெளிவாக எடுத்துக் கூறல்.

❖ 1869 மார்கழி - மஞ்சக்குப்பக் கோட்டில், வெகுசனக் கூட்டத்தில் இராமலிங்கர் தாம் நாவலரை அவதூறு செய்யவில்லை என மறுத்தல்.

அருட்பா வழக்கு. வழக்குரை மன்றத்தில் இராமலிங்கப்பிள்ளைக்கு நாவலர் கொடுத்த மதிப்பைக் கண்ணுற்ற நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்தல்.

❖ 1870 பெப்ரவரி 27 - ஆறு வருட இந்திய வாழ்க்கையின் பின்னர் யாழ்ப்பாணந் திரும்புதல். பூம்பல்லக்கிற் பெரிய வரவேற்பு ஊர்வலம். யாழ்ப்பாண மக்களால் வண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலையில் அளிக்கப்பட்ட வரவேற்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1872 - நல்லூரக் கந்தசுவாமி கோயிலில், கந்தபுராண படனத்தில், "வேதக்காட்சி" என்ற பாடலுக்குப் பயன் சொல்லல், இது அவரது புராண விரிவுரைகளுட் தலை சிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது. வண்ணை சைவ ஆங்கில வித்தியாசாலை தாபித்தல்.

- 1872 அக்டோபர் - யாழ்ப்பாணச் சமய நிலை "அச்சிட்டு வெளியிடல் திருக்கேதீச்சர ஆலய விண்ணப்பம்" வெளியிடல் (இவையிரண்டிலுந் திருக்கேதீச்சர ஆலயத்தின் சீர்கேட்டை எடுத்துக்கூறி, அதனைச் செம்மைப்படுத்துவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கும்படி வேண்டிக் கொள்ளல்)

- 1872 - கோப்பாயிலும் புலோலியிலுஞ் சைவப்பிரகாச வித்தியா சாலைகளைத் தாபித்தல்.

- 1873 ஜனவரி - நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைத் திருத்தியமைக்க ஒரு சபை கூட்டிக் காரியசபை நியமித்தல் ரூபா.6000க்குக் கையொப்பஞ் சேர்த்தல்

- 1873 பங்குனி - சைவ வினாவிடை முதற் புத்தகம் பதிப்பித்தல்.

- 1874 ஆகஸ்ட் - நல்லூர் மடத்திற் தங்கிக் கோயில் உற்சவத்தைச் சிறப்பாக நடத்துதல் .

- 1875 ஜூன் - நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முதலாம் பத்திரிகை வெளியிடல்.

- 1875 ஆகஸ்ட் - நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இரண்டாம் பத்திரிகை வெளியிடல்.
  இவையிரண்டுந் தூஷணைகளின்றி, நியாயத்தோடுஞ் சாத்திர விதியோடும் எழுதப்பட்ட கண்டனங்கள்)

- 1875 - திருவிளையாடற் புராணம், நன்னூற் காண்டிகையுரை, நன்னூல் விருத்தியுரை என்பன திருத்தி வெளியிடல். சிவபூசாவிதி, அனுட்டான விதி, சிரார்த்த விதி, தருப்பண விதி, போசன விதி, தமிழகராதி என்பன எழுதுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ 1876 ஜனவரி - "மித்தியாவாத நிரசனம்" வெளியிடல். இதில் வை.திருஞானசம்பந்தப்பிள்ளை என்பார் தம்மை ஐந்தாங்குரவர் எனப் (நாவலரை) பாடிப் பதிப்பித்ததைக் கேள்வியுற்று அதனை வேறு பிரகாரம் மாற்றிப் பதிப்பிக்கும்படி செய்வித்தமை கூறப்பட்டுள்ளது. மேலுந் தங்கபஸ்பம் என்ற பெயரில் விஷமருந்து கொடுத்துத் தம்மைக் கொலை செய்ய முயற்சி செய்தமை சிதம்பரஞ் ச. சபாபதிச் செட்டியராராற் தோல்வியடைந்தமையுங் கூறப்பட்டுள்ளது.

❖ 1876 நவம்பர் - கத்தோலிக்கர் வாழுங் கரையூரிற் பேதி நோய். மக்கள் சார்பில் நாவலர் அரசாங்கத்திற்கு வன்மையான முறையீடு.

❖ 1876 டிசம்பர் - நல்லூர்க் கோயில் நிர்வாகிக்கு எதிராக வழக்கத் தொடரச் சிலரை நியமித்தல்.

வெகுசனத்துரோகம் என்ற அறிக்கையிற் பென்சமீன் சந்தியாகுப் பிள்ளை என்ற கத்தோலிக்கரின் தொண்டி னைப் பாராட்டுதல்.

❖ 1877- "யாழ்ப்பாணத்திற் பஞ்சம்," "சமயம்! சமயம்!" "இது நல்ல சமயம்!" "வெகுசனத்துரோகம்" முதலிய துண்டுப் பிரசுரங்கள் மூலம் ஏசண்டு துவையினம் அவர்களைக் கண்டித்து எழுதுதல், ஒரு மகாசபை கூட்டிப் பொருள் சேர்த்துக் கஞ்சித் தொட்டித் தருமம் நிறுவி, எழைகளுக்குக் கஞ்சி வார்ப்பித்தல்.

❖ 1877 டிசம்பர் 12 - வேளாண்மைச் சங்கம் பற்றி இலங்கை நேசன்" பத்திரிகையில், பத்திராதிபருடன் கூட்டாகக் கருத்து வெளியிடல் .

❖ 1877 டிசம்பர் 26 - வேளாண்மைச் சங்கத்தின் பயன்பற்றிய பேச்சு இலங்கை நேசனில் வெளியீடு .

❖ 1878 ஜனவரி - தேசாதிபதி லோங்டனுக்கு அவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்தபோது அரசாங்க ஊழியர் மத்தியிலான ஊழல் பற்றி விண்ணப்பஞ் சமர்ப்பித்தல்.

❖ 1878 மே 24 - "கீரிமலைச் சிவன் கோயில்" பிரசுர வெளியீடு .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1878 ஜூன் 29 - இரு மொழித் திமிர தீபிகையினைத் தாக்குமுகமாகச் "சண்டமாருதம்" என்ற தலைப்பில் இலங்கை நேசனிற் கண்டனம் வெளியிடல்.
- 1879 மே 22 - இலங்கைச் சட்ட நிரூபண சபைத் தேர்தலிற் சேர் பொன். இராமநாதனை ஆதரித்து வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் முதற் பிரசாரக் கூட்டம்.
- 1879 ஜூலை - சைவப்பிரகாச வித்தியாசாலையிற் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையில் இறுதிப்பிரசங்கம் இப்பிரசங்கத்தின் இறுதியில், சைவ சமயிகளாற் தமக்கேற்பட்ட அவமதிப்பாலும் இடையூறாலும் மனம் வெதும்பிச் சில வார்த்தைகள் கூறல்.
- 1879 டிசம்பர் 2 - சுகவீனம் ஏற்படல்.
- 1879 டிசம்பர் 5 - வண்ணார் பண்ணையில் இறைவனடி சேரல்
- 1879 டிசம்பர் 6 - சிதம்பரம் ச. சபாபதிச் செட்டியாரால் ஈமக்கிரியைகள் செய்யப்பட்டு, சந்தனக்கட்டை மேற் திருவுடல் தகனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN: 978-955-9233-83-1

9 789559 233831

Guru Printers - Thirunelvely, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org